# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1941/41 - 2015 නොවැම්බර් මස 20 වැනි සිකුරාදා - 2015.11.20

*1941/41 ஆம் இலக்கம் - 2015 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 20 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### அரசாங்க சேவை ஆணைக்குழு

*அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அதிகாரங்களை கையளித்தல்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 57 (1) ஆம் உறுப்புரையின் (1) ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள உத்தியோகத்தர் வகுதிகள் தொடர்பாக அட்டவணையின் III ஆம் நிரலில் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் இத்தால் கையளிக்கின்றேன்.

இங்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டன.

(அ) இங்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் அனைத்தையும் நடைமுறைப்படுத்துவதற்கும் நிறைவேற்றுவதற்கும் ஏற்புடையதாக உள்ள ஏதேனும் நடவடிக்கை முறைகள், விதிகள் மற்றும் கட்டளைகளுக்கு முழுமையாக அமைந்தொழுகி அவற்றை நடைமுறைப்படுத்தவும் நிறைவேற்றவும் வேண்டும் ;

(ஆ) இவ் அட்டவணையின் II ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள எவரேனும் அரசாங்க உத்தியோகத்தரொருவர் அட்டவணையின் I ஆம் நிரலில் நேரொத்த விடய இலக்கத்தினால் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் வகுதியைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு எதிராக நடைபெறும் ஏதேனும் ஒழுக்காற்று விசாரணையின் போது முறைப்பாட்டாளராகவோ அல்லது சாட்சியாளராகவோ அல்லது பலமுள்ள சாட்சியாளராகவோ இருக்கும் பட்சத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவ் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்கள் இரத்துச் செய்யப்பட்டதாக கருதப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அத்தகைய அதிகாரங்கள் எதுவும் அவ் உத்தியோகத்தருக்கு கையளிக்கப்படவில்லை எனக்கருதி நடைமுறைப்படுத்தப்படல் வேண்டும். மற்றும் அத்தோடு,

இந்த அதிகாரங்கள் இரண்டாயிரத்து பதினைந்தாம் ஆண்டு (2015) நவெம்பர் மாதம் மூன்றாம் (03) ஆந் திகதி தொடக்கம் செயல்படுத்தப்படல் வேண்டும். அத்தோடு, 2011, நவெம்பர் மாதம் 25 ஆந் திகதிய 1733/52 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட அதிகாரக் கையளிப்பு அத்தினத்திலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,

எச். எம். காமினி செனெவிரத்ன,
செயலாளர்,
அரசாங்க சேவை ஆணைக்குழு.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி, நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05,
2015, நவெம்பர் 20.

இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை

### பகுதி I

அதிகாரங்களை கையளித்தல்

| நிரல் I<br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 1. பின்வரும் அகில இலங்கைச் சேவையின் வகுப்பு I க்கும் தரம் I க்கும் உரிய அத்துடன் அதற்கும் மேலான உத்தியோகத்தர்கள் | | |
| (அ) இலங்கை நிர்வாக சேவை<br>(ஆ) இலங்கை பொறியியலாளர் சேவை<br>(இ) இலங்கை விஞ்ஞானவியல் சேவை<br>(ஈ) இலங்கை கட்டிடக்கலைஞர் சேவை<br>(உ) இலங்கை கணக்காளர் சேவை<br>(ஊ) இலங்கை திட்டமிடல் சேவை | அரசாங்க நிர்வாகம் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கைகள் |
| (எ) இலங்கை கல்வி நிர்வாக சேவை | கல்வி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஏ) இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | கால்நடை அபிவிருத்தி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஐ) இலங்கை மருத்துவ சேவை | சுகாதாரம் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஒ) இலங்கை சுதேச மருத்துவ சேவை | சுதேச மருத்துவம் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஓ) இலங்கை நில அளவையாளர் சேவை | நிலஅளவை என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| (ஔ) இலங்கை கமத்தொழில் சேவை | கமத்தொழில் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | |
| 2. பின்வரும் அகில இலங்கைச் சேவையின் வகுப்பு I க்கும் தரம் I க்கும் உரிய அத்துடன் அதற்குக் குறைவான உத்தியோகத்தர்கள்<br>(அ) இலங்கை நிர்வாக சேவை<br>(ஆ) இலங்கை பொறியியலாளர் சேவை<br>(இ) இலங்கை விஞ்ஞானவியல் சேவை<br>(ஈ) இலங்கை கட்டிடக்கலைஞர் சேவை | அரசாங்க நிர்வாகம் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் / அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கைகள் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**பகுதி** I

அதிகாரங்களை கையளித்தல்

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| (உ) இலங்கை கணக்காளர் சேவை<br>(ஊ) இலங்கை திட்டமிடல் சேவை | | |
| (எ) இலங்கை கல்வி நிர்வாக சேவை | கல்வி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க, சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | |
| (ஏ) இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | கால்நடை அபிவிருத்தி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | |
| (ஐ) இலங்கை மருத்துவ சேவை | சுகாதாரம் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் பதவிக்கு குறைவான பதவியை வகிக்காத உத்தியோகத்தர் ஒருவர் | |
| (ஒ) இலங்கை சுதேச மருத்துவ சேவை | சுதேச மருத்துவம் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர். | |
| (ஓ) இலங்கை நில அளவையாளர் சேவை | நிலஅளவை என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | |
| (ஔ) இலங்கை கமத்தொழில் சேவை | கமத்தொழில் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**பகுதி** I

அதிகாரங்களை கையளித்தல்

| நிரல் I<br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 3. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் (இணைப்பு II) பொருள்கோடப்பட்டுள்ள அகில இலங்கைச் சேவையைச் சாராத வகுப்பு - I மற்றும் அதற்கு மேலான சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இயைபுள்ள அமைச்சின் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமை வான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கைகள் |
| 4. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் (இணைப்பு II) பொருள்கோடப்பட்டுள்ள அகில இலங்கைச் சேவையைச் சாராத வகுப்பு - I இற்கு குறைவான சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இயைபுள்ள அமைச்சின் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு அரசாங்க சேவை ஆணைக்குழுவில் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கைகள் |
| 5. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் (இணைப்பு II) பொருள் கோடப்பட்டுள்ள அகில இலங்கைச் சேவையைச் சாராத மற்றும் அமைச்சொன்றின் கீழ் வராத சிரேஷ்ட மட்டத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இயைபுடைய திணைக்களைத் தலைவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கைகள் |
| 6. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் (இணைப்பு II) பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த/ விசேட தரத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் | இயைபுள்ள அமைச்சின் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமை வான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கைகள் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**பகுதி** I

அதிகாரங்களை கையளித்தல்

| நிரல் I<br><br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br><br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br><br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| 7. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் (இணைப்பு II) பொருள்கோடப்பட்டுள்ள அமைச் சொன்றின் கீழ் வராத மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த /விசேட தரத்தைச் சேர்ந்த உத்தி யோகத்தர்கள் | இயைபுடைய திணைக்களத் தலைவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம்<br><br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுங்காற்று நடவடிக்கைகள் |
| 8. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் (இணைப்பு II) பொருள்கோடப்பட்டுள்ள மூன்றாம் மட்ட அதியுயர் தரத்தைச் சேர்ந்த உத்தி யோகத்தர்கள் | இயைபுடைய திணைக்களத் தலைவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>(II) அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இட மாற்றம்<br><br>(III)ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |
| 9. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் (இணைப்பு II) பொருள்கோடப்பட்டுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்தைச் சேர்ந்த இணைந்த சேவைகளைச் சேர்ந்த உத்தியோகத் தர்கள் | இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவை பிரமாணக்குறிப்புகளுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>(II) அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம்<br><br>(III)ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |
| 10. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் (இணைப்பு II) பொருள்கோடப்பட்டுள்ள ஆரம்ப மற்றும் இரண்டாம் மட்டத்தைச் சேர்ந்த இணைந்த சேவைகளைச் சாராத உத்தியோகத் தர்கள் | இயைபுள்ள திணைக்களத் தலைவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவை பிரமாணக்குறிப்புகளுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**பகுதி** I

அதிகாரங்களை கையளித்தல்

| நிரல் I<br>உத்தியோகத்தர் வகுதி | நிரல் II<br>அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள் | நிரல் III<br>கையளிக்கப்படும் அதிகாரங்கள் |
|---|---|---|
| | | (II) அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமை வான இடமாற்றம்<br>(III) ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |
| 11. பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் பொருள் கோடப் பட்டுள்ள இணைந்த சேவை களைச் சாராத இலங்கை இராணுவம், கடற் படை,விமானப்படை ஆகியவற்றின் சிவில் நிர்வாகத்துக்குக் கீழ் வரும் ஆரம்ப மட்ட, இரண்டாம் மட்ட மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் | இலங்கை இராணுவம், கடற்படை, விமானப் படை ஆகியவற்றின் சிவில் நிர்வாகத்துக்கு பொறுப்பான உத்தியோகத்தர்கள் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவை பிரமாணக்குறிப்புகளுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>(II) அரசாங்க சேவை ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமை வான இடமாற்றம்<br>(III)ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |
| 12. கல்வி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கீழ்வரும் அமைச்சின் கீழுள்ள தேசியப் பாடசாலைகளில் அல்லது நிறுவனங்களில் பணியாற்றும் இலங்கை அதிபர் சேவை I ஆம் வகுப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் தேசிய பாடசாலைகளின் அதிபர்கள் | கல்வி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்பட்ட நட வடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங் கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் |
| 13. கல்வி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கீழ்வரும் அமைச்சின் கீழுள்ள தேசியப் பாடசாலைகள் அல்லது நிறுவனங்களின் பின்வரும் வகுதிகளைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள்<br>(அ) இலங்கை அதிபர் சேவை I ஆம் வகுப்புக்கு கீழுள்ள உத்தியோகத் தர்கள்<br>(ஆ) இலங்கை ஆசிரியர்கள் சேவை யிலுள்ள ஆசிரியர்கள் | (1) கல்வி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/ சேவை பிரமாணக்குறிப்புக் களுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>(II) ஒழுக்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |

**அட்டவணை** *(தொடர்ச்சி)*

**பகுதி** I

அதிகாரங்களை கையளித்தல்

| *நிரல் I*<br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| (இ) பொது நிர்வாக சுற்றறிக்கை இல. 06/2006 இல் பொருள் கோடப்பட்டுள்ள இணைந்த சேவைகளைச் சாராத அல்லது இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய வகுதிகளைச் சாராத, கல்வி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கீழ் வரும் அமைச்சின் கீழுள்ள தேசியப் பாடசாலைகள் அல்லது நிறுவனங்களின் ஆரம்ப மட்ட, இரண்டாம் மட்ட மற்றும் மூன்றாம் மட்ட உத்தியோகத்தர்கள் | (2) கல்வி என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் |
| 14. உதவிப் பிரதேச செயலாளர்கள் (அமைச்சுக்குள்ளால்) | உள்நாட்டு அலுவல்கள் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர். | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம் |
| 15. இலங்கை கிராம அலுவலர் சேவை அதி உயர் வகுப்பு உத்தியோகத்தர்கள் | உள்நாட்டு அலுவல்கள் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சு செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர், குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவான இடமாற்றம்<br>(II) தாபன விதிக்கோவையின் XLVIII ஆம் அத்தியாயத்தின் இரண்டாம் அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கைகள் |
| 16. அதிஉயர் வகுப்புக்குக் குறைந்த இலங்கை கிராம அலுவலர் சேவை உத்தி யோகத்தர்கள் | (1) உள்நாட்டு அலுவல்கள் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு வால் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களுக்கு/சேவை பிரமாணக் குறிப்புகளுக்கு அமைவான நியமனமும் பதவி உயர்வும்<br>(II) ஒழுங்காற்று நடவடிக்கையும் பதவி நீக்கலும் |
| | (2) உள்நாட்டு அலுவல்கள் என்னும் விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்/ அமைச்சின் செயலாளரால் பெயர் குறிப்பிடப்பட்டு, அரசாங்க சேவை ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மேலதிக செயலாளர் ஒருவர் | (I) அரசாங்க சேவை ஆணைக்குழு வினால் அங்கீகரிக்கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக மாவட்டத்துக்கு வெளியிலான இடமாற்றம் |

**அட்டவணை**

**பகுதி** I

அதிகாரங்களை கையளித்தல்

| *நிரல் I*<br><br>*உத்தியோகத்தர் வகுதி* | *நிரல் II*<br><br>*அதிகாரங்கள் கையளிக்கப்படும் அரசாங்க உத்தியோகத்தர்கள்* | *நிரல் III*<br><br>*கையளிக்கப்படும் அதிகாரங்கள்* |
|---|---|---|
| | (3) இயைபுடைய மாவட்ட செய லாளர்/அரசாங்க அதிபர் | (I) அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப் பட்ட நடவடிக்கை முறைக்கு அமைவாக இயைபுடைய நிர் வாக மாவட்டத்துக்குள் இட மாற்றம்<br><br>(II) பதவி நீக்கல் தவிர்ந்த ஒழுக் காற்றுக் நடவடிக்கைகள் |
| | (4) இயைபுடைய பிரதேச செய லாளர் | (I) அரசாங்க சேவை ஆணைக் குழுவினால் அங்கீகரிக் கப்பட்ட நடவடிக்கை முறைக்கு அமை வாக அந்தந்த பிரதேச செயல கப் பிரிவின் பிரிவின் பரப்பெல் லைக்குள் செய்யப் படும் இட மாற்றம் |

12- 244

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.